# இராசரட்டை நாகரிகம்



தேர்ச்சி :- 5.0 இலங்கை நாகரிகத்தின் வரலாற்று வளர்ச்சிப் போக்குகள் தொடர்பான விளக்கம்

தேர்ச்சி மட்டம் 5.2 :- இராசரட்டை நாகரிகத்தின் அரசியல் பொருளாதாரம் சமூகம், கலாச்சாரம், தொழினுட்பம் என்பவற்றை விளங்கல்

## நிசங்கமல்ல மன்னன்

பொலனறுவையை ஆண்ட பலமான மன்னர்களுள் ஒருவனான நிசங்கமல்ல மன்னன் கருதப்படுகின்றான். நிசங்கமல்ல மன்னன் உண்மையில் இலங்கை அரச வம்சத்தைச் சார்ந்தவன் அல்ல. இந்தியாவின் கலிங்க வம்சத்தைச் சார்ந்தவராவார். விஜயபாகுவின் திருமணத் தொடர்புகள் காரணமாக கலிவங்க வம்சம் இலங்கையில் குறிப்பிடத்தக்களவு ஆதிக்கத்தைப் பெற்றது பராக்கிரமபாகுவிற்குப் பின் ஏற்பட்ட அரசியல் வெற்றிடத்தைப் பயன்படுத்த நிசங்கமல்லன் ஆட்சிப் பொறுப்பை பெற்றிருந்தான்

இவன் பற்றி நாம் அறிந்து கொள்ள ரன்கொத் விகாரைத்தூண் குறிப்பு, ஹெடதாகபய தவர் குறிப்பு, வக்துருப்பே குறிப்பு, ரங்கிரி தம்புலு குறிப்பு போன்றன உதவுகின்றன. இலங்கை வரலாற்றைப் பொறுத்தவரையில் அதிகளவான கல்வெட்டுக்களைப் (89) பொறித்தவன் என்ற வகையில் இவன் முக்கியத்துவம் பெறுகின்றான். உண்மையில் நிசங்கமல்லனின் ஆட்சிக்காலம் 09 ஆண்டுகளாகும். எனினும் இக்காலகட்டத்தில் தன்னால் இயன்றளவுக்கு ஸ்திரமான ஆட்சியை வழங்கியதுடன் சமய சமூக சேவை-களையும் ஆற்றியுள்ளான்

குறிப்பாக இவன் காலத்தில் சமயத்திலேற்பட்ட பிணக்குகளை நீக்கி பிணக்குற்றிருந்த மூன்று தரப்பாரையும் ஒற்றுமைப்படுத்தியுள்ளான். மேலும் பௌத்த சமயத்தைப் பாதுகாப்பதிலும் கவனம் செலுத்தியுள்ளான். ஒழுக்கம் தவறிய பிக்குகளைச் சமயத்திலிருந்து நீக்கியும், ஏனைய பௌத்த பிக்குகளுக்கு எச்சரிக்கை விடுத்துள்ளான். அத்துடன் பலசமய வழிபாட்டிடங்களையும் அமைக்க உதவியுள்ளான். இவனால் ரன்கொத் விகாரை, சங்காராம விகாரை போன்றவற்றை அமைத்ததோடு வட்ட தாகேய, ஹெட்டதாகேய போன்றவற்றையும் நிர்மாணித்துள்ளான் அத்துடன் கலையம்சம் பொருந்திய நிசங்கலதா மண்டபத்தையும் இவன் நிர்மாணித்துள்ளான். இது தவிர பராக்கிரமபாகுவின் தொடர்ச்சியான போர்களினால் நலிவுற்றிருந்த மக்களின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்பும் வகையில் செயற்பட்டமையைப் அறிய முடிகிறது.

தொகுப்பு : திரு.த.சுரேன், வரலாறு (ஆசிரியர்) (யா/கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி)
கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

இவனால் நாட்டின் பல்வேறு இடங்களிலும் தான நிலையங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன் மக்களை வருத்திய அனைத்து வரிச்சுமைகளும் நீக்கப்பட்டது. உதாரணமாக சேனைப்பயிர்ச் செய்கையின் மீது விதிக்கப்பட்ட கெதிஅட கொடுகனக போன்ற வரிகள் நீக்கப்பட்டது. அத்துடன் தனது மனைவி, பிள்ளைகள் நிறைக்குச் சமனான பொருட்களைத் தானம் வழங்கும் துலாபாக் கொடை இவனால் வழங்கப்பட்டது

நிசங்கமல்லன் இலங்கையின் ஆட்சிப் பொறுப்பையேற்றுக் கொண்ட காலகட்டத்தில் பல சவால்களுக்கு முகம் கொடுத்தான். குறிப்பாக இவனின் பிறப்புத் தொடர்பாகப் பல விமர்சனங்கள் காணப்பட்டது. ஏனெனில் இவன் கலிங்க தேசத்தில் பிறந்த வெளிநாட்டவனாகக் காணப்பட்டமையாகும். எனவே இவன் கலிங்க தேசத்தவர்களுக்கு இலங்கை சிம்மாசனம் உரிமையுள்ளதெனக் கூறமுற்பட்டான். விஜயனின் வழிவந்தோர் கலிங்க தேசத்தவர் எனவும், அவர்களுக்கு இலங்கை சிம்மாசனம் மீது உரிமையுள்ளது என கூறியதுடன் அதனைக் கல்வெட்டுக்களாகவும் பொறித்து வைத்துள்ளான்.

இவனது கல்பொத்தக் கல்வெட்டு அரசவம்சம் பற்றியே பேசுகின்றது. மேலும் இலங்கை சிம்மாசனம் மீது சோழ பாண்டிய வம்சங்களுக்கு எவ்வித உரிமையும் இல்லையென இவன் வாதிட்டான். அத்துடன் முதலாம் பராக்கிரமபாகு சிங்கபுரத்திற்கு செய்தி அனுப்பித் தன்னை வரவழைத்தாகவும் இவன் குறிப்பிட்டுள்ளான்.

முதலாம் பராக்கிரமபாகு அக்கால கட்டத்தில் மிகுந்த செல்வாக்குடன் திகழ்ந்தமையால் அவன் புகழ் இவரின் செயற்பாடுகளுக்கு பாதகமாக அமைந்தது. எனவே, மக்கள் மத்தியில் தான் இடம் பிடிப்பதாக பரக்கிரமபாகுவை ஒத்த சேவைகளை இவனும் ஆற்றியுள்ளான். சில சமயங்களில் பராக்கிரமபாகுவின் நிர்மானங்களுக்குத் தனி பெயரைச் சூட்டியுள்ளமையை அறிய முடிகிறது.





தொகுப்பு : திரு.த.சுரேன், வரலாறு (ஆசிரியர்) (யா/கோப்பாய் கிறிஸ்தவக்கல்லூரி)

கணினி வடிவமைப்பு : செல்வி.மு.தர்மிலா ஆசிரியர், (த,தொ,தொ) (யா/அச்செழு சைவப்பிரகாச வித்தியாலயம் )

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

நிசங்கமல்லன் எதிர்நோக்கிய மிகப்பெரிய சவாலாக அமைவது விவசாயிகளின் எதிர்ப்பாகும். அதாவது கொவிக் குலத்தவர் என அழைக்கப்படும் விவசாயிகள் இவன் தொடர்பாக கடும் எதிர்ப்பபைக் காட்டினார். இவன் இவ் எதிர்ப்பாளர்களுக்குக் கடுமையான தண்டனைகள் வழங்கி எச்சரிக்கைகள் விடுத்தார். இவரின் கல்வெட்டுக்களில் கொவிக்குலத்தவரைத் தூற்றியதுடன் ஆட்சியுரிமை கலிங்க தேசத்தவருக்கே உண்டு எனவும் அறிவித்தார். பல்வேறு இடங்களில் பராக்கிரமபாகுவின் சேவைகளைக் குறைவாக மதித்துத் தன் சேவைகளை உயர்வாகக் கூறியுள்ளமை தெளிவாகின்றது.

மேலும் நாடு முழுவதிலும் இவனால் சுற்றுப்பிரயாணங்கள் மேற்கொள்ளப்பட்டது. உருகுனு, பிஹிட்டி, மாயா போன்ற பிரதேசங்களுக்குச் சுற்றுப் பிரயாணங்களை மேற்கொண்டு கலகங்களை அடங்கியதுடன் சிவனொளிபாதமலை, களனி, சேருவெல போன்ற இடங்களில் காணப்பட்ட புனிதத் தலங்களைத் தரிசிக்கவும் தலைப்பட்டான். மக்கள் தொடர்பில் மென்மையான கொள்கைகள் இவனால் கையாளப்பட்டதாகத் தெரிய வருகின்றது.

இக்கால கட்டத்தில் பலமாகக் காணப்பட்ட பராக்கிரமபாகுவின் சேனாதிபதிகள் இவனை எதிர்த்ததாகவும் ஊகிக்க முடிகிறது. ஏனெனில் பராக்கிரமபாகுவின் விதவை மனைவியான லீலாவதியை சகசமல்லன் என்ற சேனாதிபதி அரசியாக்கியமை இவன் காலத்தில் கூட பராக்கிரமபாகுவின் தளபதிகள் வலுவோடிருந்தமையை எடுத்து இயம்புகிறது. மேலும் திரைமறைவில் கலிக்கர்களுக்கு எதிராகப் பாண்டியர்களும் எழுச்சி பெற்றுக் கொண்டிருந்தனர். குறிப்பாக இவன் ஆட்சி புரிந்த காலத்தில் தென்னிந்தியாவில் பாண்டியர்கள் எழுச்சிபெற்றிருந்தனர். எனவே பாண்டியர்களின் சவால்களைச் சமாளிக்க வேண்டிய தேவை இவனுக்கு காணப்பட்டது.

மக்களைத் தன்வசம் இழுப்பதற்காக சலுகை வழங்கும்ள வரிக் கொள்கையொன்றை இவன் கடைப்பிடித்தான். மேலும் துலாபாரம் உள்ளிட்ட தானம் வழங்கியும் மக்கள் மற்றும் பிக்குகளின் ஆதரவைப் பெற முயற்சித்தான். இவ்வாறு 9 ஆண்டுகள் இலங்கையைச் சிறப்பான முறையில் ஆள நிசங்கமல்லனால் இயலுமாக இருந்தது.





Copyright © www.e-thaksalawa.moe.gov.lk

Copyright © www.e-thaksalawa.moe.gov.lk